அதேபோன்று, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை ஆசிரியர் பணியிடத்துடன் ஈர்த்து அரசுப் பள்ளியாக மாற்றிட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் வாரியத்தின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளை வரும் கல்வியாண்டோடு மூடுவதாக நிர்வாகம் அறிவித்துள்ள நிலையில் அப்பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஒன்றியம், ஜி.டி.ஜி. நடுநிலைப் பள்ளியில் பணியாற்றிவரும் 10 ஆசிரியர்களைப் பயன்படுத்தி அங்கே இருக்கக்கூடிய நிர்வாகம் வங்கியிலே 43 இலட்சம் ரூபாய் கடனாகப் பெற்று இன்றைக்கு ஆசிரியர்களை மோசடி செய்துகொண்டிருக்கிறது. அந்த ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மதுரை மாநகராட்சியில் காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் காலப்பட்டியில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு 2 இலட்சம் ரூபாய் பணம் கட்டப்பட்டும், இதுவரை அந்தப் பள்ளி மாற்றப்படாத நிலைமையில் இருக்கிறது. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்....

6. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) ஊராட்சிப் பணியாளர்களுக்குத் தொகுப்பூதியம் உயர்த்தல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகளை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 ஏப்ரல் 7

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஊரகப் பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்கு என்னுடைய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. கிராம அளவில் அடிப்படை வசதிகளை வழங்கி, அதன்மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த எனது அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிராம ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவு ஆகிய பணிகள் கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளாகும். இந்தப் பணிகள் அனைத்தும் 12,026 முழு நேர மற்றும் பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள், 39,152 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், மற்றும் 11,653 துப்புரவுப் பணியாளர்கள் மூலமாக, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான ஊதியத்தை கிராம ஊராட்சி வழங்குகிறது. கிராம மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதில், முக்கியப் பங்காற்றும் மேற்சொன்ன பணியாளர்கள் யாவரும், அடித்தட்டுப் பணியாளர்கள் ஆவர். மக்களுக்குச் சேவை செய்யும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு, நிறைவான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது என் எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில்தான், அண்மையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு நான் ஊதிய உயர்வு வழங்கினேன். அதே அடிப்படையில், கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்க நான் தற்போது முடிவு செய்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, ஊராட்சி முழு நேர எழுத்தர், பகுதி நேர எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் இனி, மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதாவது, ஊராட்சி முழு நேர எழுத்தர்கள், தற்போது பெற்றுவரும் 1,800 ரூபாய் தொகுப்பூதியம் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள், தற்போது பெற்றுவரும் 800 ரூபாய் தொகுப்பூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தற்போது பெற்றுவரும் 400 ரூபாய் தொகுப்பூதியம் 600 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், கூடுதலாக இயக்கப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒவ்வொன்றிற்கும் தற்போது 150 ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது; இது 250 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-35

ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பெற்றுவரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தற்போது நான் அறிவித்துள்ள இந்த ஊதிய உயர்வினால் கிராம ஊராட்சிகளின் 62,831 அடித்தட்டுப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஊதிய உயர்வு, 1-4-2005 முதல் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 16.24 கோடி ரூபாய் ஆகும்.

கிராமப்புற மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் முதலான பணிகளை மேற்கொண்டுவரும் கிராம ஊராட்சிகளின் அடித்தட்டுப் பணியாளர்கள், மேலும் ஊக்கம் பெற்று உற்சாகத்துடன் பணிபுரிய இந்த ஊதிய உயர்வு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) பழுதடைந்த தொகுப்பு விடுகளைச் செப்பனிடுதல் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கிராமங்கள் யாவும் தேவையான அடிப்படை வசதிகளைப்பெற வேண்டும்; கிராம மக்கள் யாவரும்